# தஞ்சாவூர் மண்டலம்

# அரியலூர் நகராட்சி

# 2021–22 ஆம் ஆண்டு

# நிர்வாக அறிக்கை

# அரியலூர் நகராட்சி

## 2021–22 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பு

அரியலூர் நகராட்சி அரியலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு நகராட்சிகளில் உள்ள ஒரு நகராட்சி ஆகும். இந்நகராட்சி அரசாணை எண் 372 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் .16.12.2014ன்படி அரியலூர் பேரூராட்சி நிலையிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதனை தொடர்ந்து அரசாணை எண் 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் .09.08.2010ன்படி மூன்றாம் நிலை நகராட்சி நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அரியலூர் நகராட்சியின் மக்கள் தொகை 28902 ஆகும். இதன் பரப்பளவு 7.62 ச.கி.மீ ஆகும்.

### 2) நகர் மன்றம்

அரியலூர் நகர் மன்றம் மொத்தம் 18 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மக்கள் தொகை அடிப்படையில் பட்டியல் இனத்தவர்கள் , பட்டியல் இனப்பெண்கள் மற்றும் பொதுப்பிரிவு பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | இட ஒதுக்கீடு விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை | வார்டு எண்களின் விபரம் |
|---|---|---|---|
| 1) | பொது | 8 | 3,4,7,8,11,13,16,17 |
| 2) | பொது (பெண்கள்) | 8 | 1,2,5,6,9,12,14,15 |
| 3) | பட்டியல் இனத்தவர்கள்(பொது) | 1 | 18 |
| 4) | பட்டியல் இனத்தவர்கள் (பெண்கள் ) | 1 | 10 |
| 5) | பழங்குடியினர்(பொது) | - | - |
| 6) | பழங்குடியினர்(பெண்கள்) | - | - |
| மொத்தம் | | 18 | - |

## 3) நிர்வாகம்

அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் கீழ்க்கண்டுள்ளபடி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிந்து வருகின்றனர்.

| வ. எண் | பணியின் விபரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள் | காலியாக உள்ள பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| | **பொது பிரிவு (General Service)** | | | |
| | மேலாளர் (Manager) | 1 | 0 | 0 |
| | உதவியாளர் (Assistant) | 1 | 0 | 1 |
| | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 3 | 3 | 0 |
| | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | 1 | 0 |
| | இரவு காவலர் (Night Watchman) | 1 | 1 | 0 |
| | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 5 | 5 | 0 |
| | ஒட்டுநர் (Driver) | 1 | 0 | 1 |
| | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 1 | 1 | 0 |
| | மார்க்கெட் காவலர் (Market Watch Man) | 1 | 1 | 0 |
| | புள்ளி விபரக்குறிப்பாளர் (Date Entry Operator) | 1 | 1 | 0 |
| | **பொறியியல் பிரிவு (Engineering Service )** | | | |
| | நகராட்சி பொறியாளர் (Municipal Engineer) | 1 | 1 | 0 |
| | பொது பணி மேற்பார்வையாளர் (Over Sear) | 1 | 1 | 0 |
| | பணி ஆய்வாளர் (Work Inspector ) | 1 | 0 | 1 |
| | குழாய் ஆய்வாளர் (Tape Inspector) | 1 | 1 | 0 |
| | குழாய் பொருத்துநர் (Fitter) | 2 | 2 | 0 |
| | மின்பணியாளர் (Electrician –II) | 2 | 2 | 0 |
| | குளக்காவலர் (Tank WatchMan) | 3 | 1 | 2 |

| வ. எண் | பணியின் விபரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள் | காலியாக உள்ள பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| | **பொது சுகாதாரப்பிரிவு (Health Service)** | | | |
| | சுகாதார ஆய்வாளர் (Sanitary Inspector) | 1 | 1 | 0 |
| | சுகாதார பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 3 | 3 | 0 |
| | களப்பணியாளர் (Field Assistant) | 1 | 1 | 0 |
| | ஒட்டுநர் (Driver) | 2 | 1 | 1 |
| | தூய்மை பணியாளர் (Sanitary Worker) | 48 | 37 | 11 |
| | **நகரமைப்பு பிரிவு (Town Planning )** | | | |
| | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | 1 | 0 |

பல்வேறு பிரிவுகளில் உள்ள காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ,பொது நிர்வாகம் மற்றும் பொதுசுகாதார பிரிவு பணியிடங்களில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகிறது.

### 3) வருவாய் இனங்கள்

அரியலூர் நகராட்சியில் நடப்பு நிதியாண்டில் வருவாய் தரும் இனங்களில் கீழ் கண்ட விபரபடி கேட்பு எழுப்பப்பட்டு வருவாய் ஈட்டப்படுகிறது.

| வரிசை எண் | வரி/வரி யில்லா இனங்கள் விபரம் | வரி விதிப்புக்களின் எண்ணிக்கை | கேட்பு தொகை (ரூ.லட்சத்தில்) | வசூல் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1) | சொத்து வரி | 13440 | 188.14 | 121.39 |
| 2) | காலி மனை வரி | 285 | 9.97 | 9.27 |
| 2) | குடிநீர் கட்டணம் | 5080 | 69.65 | 35.78 |
| 3) | தொழில் வரி | 1112 | 87.15 | 54.62 |
| 4) | பாதாள சாக்கடை கட்டணம் | 1694 | 33.18 | 19.06 |
| 5) | வரியில்லா இனங்கள் | 293 | 252.52 | 140.92 |

## 4) நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரம்

அரியலூர் நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவிபரப்படி அரசு மான்ய தொகை உதவியுடன் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | திட்டத்தின் மதிப்பீடு | விடுவிக்கப்பட்ட தொகை | மொத்த பணிகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மூலதன நிதி 2018–19 | திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பிரதான குழாய் மாற்றி அமைத்தல் | 1517.55 | 1216.48 | 1 | 0 |
| 2 | IUDM 2021–22 | சிப்பம் 1 | 193.00 | 0 | 0 | 1 |
| 3 | | சிப்பம் 2 | 196.00 | 0 | 0 | 1 |
| 4 | | சிப்பம் 3 | 197.00 | 0 | 0 | 1 |
| 5 | | சிப்பம் 4 | 197.00 | 0 | 0 | 1 |
| 6 | | சிப்பம் 5 | 59.00 | 0 | 0 | 1 |
| 7 | SRP 2021–22 | சிப்பம் 1 | 200.00 | 0 | 0 | 3 |
| 8 | | சிப்பம் 2 | 150.00 | 0 | 0 | 8 |
| 9 | 15th CFC 2021-22 (Tied) | சிப்பம் 1 | 10.00 | 10.00 | 0 | 1 |
| 10 | | சிப்பம் 2 | 10.00 | 10.00 | 0 | 1 |
| 11 | | சிப்பம் 3 | 10.00 | 10.00 | 0 | 1 |
| 12 | | சிப்பம் 4 | 10.00 | 10.00 | 0 | 1 |
| 13 | 15th CFC 2021-22 (Un-tied) | சிப்பம் 1 | 10.00 | 0 | 1 | 0 |
| 14 | | சிப்பம் 2 | 10.00 | 0 | 1 | 0 |
| 15 | | சிப்பம் 3 | 10.00 | 0 | 1 | 0 |
| 16 | | சிப்பம் 4 | 4.99 | 0 | 1 | 0 |
| 17 | | சிப்பம் 5 | 6.00 | 0 | 1 | 0 |
| 18 | KNMT 2021-22 | வாரச்சந்தை பின்புறம் அறிவுசார் மையம் கட்டிடம் கட்டும் பணி | 150.00 | 0 | 1 | 0 |
| 19 | | இருசுக்குட்டை மேம்படுத்தும் பணி | 104.00 | 0 | 1 | 0 |
| 20 | O & M Gap filling Interest fund 2021-22 | எத்துராஜ் நகர் மற்றும் சிங்காரத்தெருவில் உள்ள சமுதாய கழிவறை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் | 2.64 | 0 | 2 | 0 |
| 21 | | காந்தி மார்க்கெட், அய்யப்பன் ஏரி மற்றும் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் உள்ள பொது கழிவறை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் | 3.40 | 0 | 3 | 0 |
| 22 | NATIONAL URBAN HEALTH MISSION (NUHM) 2020-21 | ஜெயங்கொண்டம் சாலை கிராம நிர்வாக அலுவலகம் எதிரில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி | 80 | 0 | 1 | 0 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | திட்டத்தின் மதிப்பீடு | விடுவிக்கப்பட்ட தொகை | மொத்த பணிகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகள் |
|---|---|---|---|---|---|---|
| 23 | Mines fund | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி, சுற்றுச்சுவர், அணுகுசாலை, விடுப்பட்ட மற்றும் விஸ்தரிப்பு பகுதிகளுக்கு குடிநீரி விநியோக குழாய் அமைத்தல் மற்றும் மருதையாறு குறுக்கே உந்து குழாய் தாங்கும் பாலம் அமைத்தல் பணி | 200.00 | 0 | 1 | 0 |

- மூலதன நிதி திட்டத்தின் கீழ் திருமானூர் நீரேற்றும் நிலையத்தில் இருந்து அரியலூர் நகராட்சிக்கு ரூ.1517.55 இலட்சம் மதிப்பீட்டில் பிராதான குடிநீர் குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- IUDM திட்டத்தின்கீழ் ரூ.842.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.40.99 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தை பின்புறம் அறிவுசார் மையம் கட்டிடம் கட்டும் பணி நடைப்பெற்று வருகிறது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.104.00 இலட்சம் மதிப்பீட்டில் இருசுக்குட்டை மேம்படுத்தும் பணிகள் நடைப்பெற்று வருகிறது

- இயக்குதலும் காத்தலும் இடை வெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ.2.64 இலட்சம் மதிப்பீட்டில் எத்துராஜ் நகர் மற்றும் சிங்காரத்தெருவில் உள்ள சமுதாய கழிவறை மற்றும் ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி மார்க்கெட், அய்யப்பன் ஏரி மற்றும் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் உள்ள பொது கழிவறை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

- **NUHM** திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டம் சாலை கிராம நிர்வாக அலுவலகம் எதிரில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- கனிமவள நிதியின் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி, சுற்றுச்சுவர், அணுகுசாலை, விடுப்பட்ட மற்றும் விஸ்தரிப்பு பகுதிகளுக்கு குடிநீரி விநியோக குழாய் அமைத்தல் மற்றும் மருதையாறு குறுக்கே உந்து குழாய் தாங்கும் பாலம் அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 5) குடிநீர் விநியோகம்

அரியலூர் நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட அரியலூர் நகரில் இருந்து சுமார் 28 கி.மீட்டர் தொலைவில் உள்ள திருமானூர் கொள்ளிடம் ஆற்றங்கரையிலிருந்து 1992ம் ஆண்டு **கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்** மூலம் 2 நீர் பெரும் ஆதார கிணறுகள், 2002ம் ஆண்டு **பொன்விழா குடிநீர் திட்டத்தின்** மூலம் 2 நீர் பெரும் ஆதார கிணறுகள் மூலம் மற்றும் வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் 4 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீரானது சாத்தமங்கலம், கீழப்பழூவூர், வாரணவாசி, தவுத்தாய்குளம் மற்றும் அம்மாக்குளம் ஆகிய வழியோர கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், அரியலூர் நகராட்சிக்கு கொள்ளிடம் ஆற்றில் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 2.54 MLD அளவு பெறப்படும் குடிநீர் நகராட்சி அலுவலக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (3.50 இலட்சம் லிட்டர்), கால்நடை மருத்துவமனை வளாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (6.00 இலட்சம் லிட்டர்) மற்றும் கல்லூரி சாலை மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (5.00 இலட்சம் லிட்டர்) ஆகியவற்றின் மூலம் தினசரி

86LPCD என்ற வீதத்தில் தினசரி குடிநீர் 1.30 மணி நேரம் விநியோகம் செய்யப்படுகிறது.

அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுபாடுன்றி குடிநீர் கிடைக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## <u>குடிநீர் விநியோகம் பற்றிய குறிப்பு</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | குடிநீர் ஆதாரம் அமைந்துள்ள இடங்கள் | : | திருமானூர்– கொள்ளிடம் ஆறு |
| 2) | தேவைப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவு (135 LPCD வீதம் ) | : | 3.90 MLD (UGSS Town) |
| 3) | தற்போது கிடைக்கப்பெறும் குடிநீர் கொள்ளளவு (86 LPCD வீதம் ) | : | 2.50 MLD |
| 4) | தினமும் வழங்கப்படும் குடிநீர் அளவு நாள் ஒன்றுக்கு | : | 86 லிட்டர் |
| 5) | குடிநீர் தன்மை : சுத்திகரிக்கப்படுத்துதல் / நீர் உறிஞ்சு கிணறு | : | நீர் உறிஞ்சு கிணறு |
| 6) | குடிநீர் விநியோகம் | : | தினமும் ஒரு முறை (1.30 மணி நேரம்) |
| 7) | உள்ளூர் கூடுதல் நீர் ஆதாரங்கள் | | |
| | 1. ஆழ்துளைக் கிணறுகள் (கைப்பம்பு) | : | 13 |
| | 2. ஆழ்துளைக் கிணறுகளுடன் கூடிய மின் விசைப்பம்புகள் | : | 53 |
| | 3. ஏரிகள் | : | 13 |
| 8) | மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு | : | 1) நகராட்சி அலுவலகம் : 3.50 இலட்சம் லிட்டர்<br>2) கல்லூரிச் சாலை : 5.00 இலட்சம் லிட்டர்<br>3) கால்நடை மருத்துவமனை : 6.00இலட்சம் லிட்டர் |
| 9. | குடிநீர் பிரதான குழாய்கள் நீளம் (பம்பிங் மற்றும் இயல்பு நீர்வரத்து) | : | 28 கி,மீ |
| 10. | குடிநீர் பகிர்மான குழாய்கள் மொத்த நீளம் | : | 47 கி.மீ |
| 11 | பொதுக்குழாய்கள் எண்ணிக்கை | : | 1 65 |
| 12 | குடிநீர் குழாய் இணைப்புகள் எண்ணிக்கை | : | 5075<br>குடியிருப்பு : 5012<br>வணிக இணைப்பு : 63 |

13 குடிநீர் கட்டணம் வைப்புத்தொகை

| | | |
|---|---|---|
| 1. குடியிருப்பு | : | ரூ.5,000/– |
| 2. வணிகம் | : | ரூ.10,000/– |
| 3. தொழிற்சாலை | : | ரூ.10,000/– |

14 குடிநீர் மாத வாடகை

| | | |
|---|---|---|
| 1. குடியிருப்பு | : | ரூ.60/– |
| 2. வணிகம் | : | ரூ.150/– |
| 3. தொழிற்சாலை | : | ரூ.150/– |

15 தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார்கள்

| | | |
|---|---|---|
| 1. 50 H.Pமோட்டார் | : | 4 |
| 2. 7.5 H.P மோட்டார் | : | 12 |
| 3. 200 KVA டிரான்ஸ்பார்மர் | : | 2 |

16 குடிநீர் வழங்கப்படும் வழியோரக்கிராமங்கள் எண்ணிக்கை : 5 எண்ணிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| : | 1) சாத்தமங்கலம் | – | 60,000 லிட்டர் |
| : | 2) கீழப்பழுவூர் | – | 1,00,000 லிட்டர் |
| : | 3) வாரணவாசி | – | 60,000 லிட்டர் |
| : | 4) தவுத்தாய்குளம் | – | 60,000 லிட்டர் |
| : | 5) அம்மாகுளம் | – | 30,000 லிட்டர் |
| | கூடுதல் | – | 3,10,000 லிட்டர் |

<u>**திடக்கழிவு மேலாண்மை**</u>

- அரியலூர் நகராட்சி பகுதிகளில் தினசரி வீடு வீடாக மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்கப்படுகிறது.
- சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் கழிவுகள், நுண் உரமாக்குதல் மையங்களில் (MCC, OCC) உரமாக்கப்பட்டு விவசாயத்திற்கு வழங்கப்படுகிறது. மக்காத கழிவுகள், உலர் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால் குப்பைகள் திறந்தவெளியில் கொட்டப்படாமல் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே அழிக்கப்படுகிறது. (Zero waste concept).

## தொழில்வரி விதிப்பு விபரங்கள்

| வ. எண் | ஆறுமாத சராசரி | (25% rjவீகிதம் ) 01.10.2018 முதல் திருத்திய தொழில்வரி bjhif (\) |
|---|---|---|
| 1. | ரூ.21000/– வரை | இல்லை |
| 2. | ரூ.21001/– முதல் ரூ.30000/– வரை | 154/- |
| 3. | ரூ.30001/– முதல் ரூ.45000/– வரை | 382/- |
| 4. | ரூ.45001/– முதல் ரூ.60000/– வரை | 763/- |
| 5. | ரூ.60001/– முதல் ரூ.75000/– வரை | 1143/- |
| 6. | ரூ.75001/– மற்றும் அதற்கு மேல் | 1250/- |

**முடிவுரை :**

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி, சாலை வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வு இல்லாமல் வழங்க இந்நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் பெறப்படும் கருத்துக்களை ஏற்று அதற்கு பரிந்துரை செய்து திட்ட பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் மற்றும் உள் மற்றும் வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையை முடிக்கிறேன்.

ஆணையர்

அரியலூர் நகராட்சி.